# Don

# தமிழ் துணைவன்

# 11






இலவச இணைப்பு
தமிழ் பயிற்சிப் புத்தகம்

- அனைத்து முக்கிய ஒரு மதிப்பெண் வினாக்கள்
- தெளிவுரை, விளக்கத்துடன் செய்யுள் பகுதி
- வரிசைப்படுத்தப்பட்ட உரைநடை விடைகள்
- புணர்ச்சி விதிகள் அட்டவணை
- இலக்கிய நயம் பாராட்டல் – விளக்கமாக
- அரசு வினாத்தாள்

**2022-2023**

முழுமையாக திருத்தப்பட்ட பதிப்பு

டான் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

# Don

# தமிழ் துணைவன்

இலவச இணைப்பு
பயிற்சிப் புத்தகம்



11

முழுமையாக திருத்தப்பட்ட
2021 - 2022
பதிப்பு






நூலாக்கம்
Dr. S.A. ராஜ்குமார் MBBS., MS(EM)
DIRECTOR, ACADEMICS.



டான் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

# பொருளடக்கம்


மனப்பாடப் பாடல்கள் ............ 05

**1. மொழி – என்னுயிர் என்பேன்**

| | | |
|---|---|---|
| செய்யுள் | யுகத்தின் பாடல் ☆ | 09 |
| உரைநடை | பேச்சுமொழியும், கவிதை மொழியும் | 15 |
| செய்யுள் | நன்னூல் பாயிரம் ☆ | 20 |
| துணைப்பாடம் | ஆறாம் திணை | 27 |
| இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 30 |

**2. இயற்கை / வேளாண்மை / சுற்றுச்சூழல் – மாமழை போற்றுதும்**

| | | |
|---|---|---|
| உரைநடை | இயற்கை வேளாண்மை | 38 |
| செய்யுள் | ஏதிலிக்குருவிகள் | 44 |
| | காவியம் ☆ | 49 |
| | திருமலை முருகன் பள்ளு | 52 |
| | ஐங்குறுநூறு | 60 |
| துணைப்பாடம் | யானை டாக்டர் | 66 |
| இலக்கணம் | புணர்ச்சி விதிகள் | 71 |

**3. பண்பாடு – பீடு பெற நில்**

| | | |
|---|---|---|
| உரைநடை | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு | 90 |
| செய்யுள் | காவடிச்சிந்து | 96 |
| | குறுந்தொகை ☆ | 103 |
| | புறநானூறு ☆ | 108 |
| துணைப்பாடம் | வாடி வாசல் | 113 |
| இலக்கணம் | பகுபத உறுப்புகள் | 115 |
| வாழ்வியல் | திருக்குறள் ☆ | 127 |

**4. கல்வி – கேடில் விழுச்செல்வம்**

| | | |
|---|---|---|
| உரைநடை | தமிழகக் கல்வி வரலாறு | 148 |
| செய்யுள் | பிள்ளைக்கூடம் | 155 |
| | நற்றிணை | 160 |
| | தொல்காப்பியம் - சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் | 167 |
| துணைப்பாடம் | இதழாளர் பாரதி | 171 |
| இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | 175 |

**5. நாகரிகம் / தொழில் / வணிகம் – நாளெல்லாம் வினைசெய்**

| | | |
|---|---|---|
| உரைநடை | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 184 |
| செய்யுள் | சீறாப்புராணம் | 190 |
| | அகநானூறு | 201 |
| துணைப்பாடம் | பிம்பம் | 210 |
| இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 212 |
| வாழ்வியல் | திருக்குறள் ☆ | 224 |

6. கலை / அழகியல் / புதுமைகள் – பல்கலை நிறுவு

உரைநடை காலத்தை வென்ற கலை.......234
செய்யுள் ஆத்மாநாம் கவிதைகள் ....... 240
குற்றாலக் குறவஞ்சி ....... 244
திருச்சாழல்....... 249
துணைப்பாடம் இசைத்தமிழர் இருவர்....... 255
இலக்கணம் கலைச் சொல்லாக்கம்....... 260

7. நாடு / சமூகம் / அரசு / நிருவாகம் – வையத் தலைமை கொள்

உரைநடை காற்றில் கலந்த பேரோசை....... 270
செய்யுள் புரட்சிக்கவி ☆ ....... 276
பதிற்றுப்பத்து ....... 290
துணைப்பாடம் சிந்தனைப் பட்டிமன்றம்....... 298
இலக்கணம் ஆக்கப்பெயர்கள் ....... 303

8. மனிதம் / ஆளுமை – யாரையும் மதித்து வாழ்

உரைநடை தாகூரின் கடிதங்கள் ....... 311
செய்யுள் ஒவ்வொரு புல்லையும் ....... 315
தொலைந்து போனவர்கள்....... 320
மனோன்மணீயம் ....... 325
துணைப்பாடம் செவ்வி....... 340
இலக்கணம் மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் ....... 342

இணைப்புப் பகுதி

1. இலக்கிய நயம் பாராட்டல் .......350
2. பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும் .......363
3. கவிதை .......376
4. பழமொழிகளும் வாக்கியங்களும் – தமிழாக்கத்துடன்.... 380
5. வாழ்வியல் – திருக்குறள் பயன்பாடு ....... 386
6. கலைச்சொற்கள் – தமிழாக்கம் ....... 401
7. பிறமொழிச்சொற்கள் – தமிழாக்கம் ....... 403
8. படைப்புகளும் ஆசிரியர்களும் ....... 407
9. வினாத்தாள் வடிவமைப்பு + நேரப்பங்கீட்டு முறை.......408

அரசு வினாத்தாள்....... 409

# மனப்பாடப் பாடல்கள்

## யுகத்தின் பாடல்:

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை

— சு. வில்வரத்தினம்

பாவகை : சிந்துப்பா

## பாயிரம் இல்லது பனுவல் அன்றே

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே 47
காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே 48

— பவணந்தி முனிவர்

பாவகை : நிலைமண்டில ஆசிரியப்பா

## காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

— பிரமிள்

## குறுந்தொகை

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.

— வெள்ளிவீதியார்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

## புறநானூறு

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

– கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

## திருக்குறள்

### அடக்கமுடைமை

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

### ஒப்புரவறிதல்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

### புகழ்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

### நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

### துறவு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

# திருக்குறள்

## வலியறிதல்

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.
அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.
அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

## காலமறிதல்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

## குறிப்பறிதல்

குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

## பகைத்திறம் தெளிதல்

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.
இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

## மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.
நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். M-20

## இரவச்சம்

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

பாவகை : குறள் வெண்பா

## புரட்சிக்கவி

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

பாவகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## தொலைந்து போனவர்கள்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் – வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் – உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

'நான்' என்பாய் அது நீயில்லை – வெறும் M-20
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை – அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

– அப்துல் ரகுமான்

பாவகை : சிந்துப்பா

இயல் 1



# 01. யுகத்தின் பாடல்

செய்யுள்

## நூற்குறிப்பு

* கவிஞர் சு.வில்வரத்தினம் எழுதிய யுகத்தின் பாடல் புதுக்கவிதை வகையைச் சேர்ந்தது.
* இது கவிஞர் சு.வில்வரத்தினத்தின் கவிதைகள் அனைத்தும் அடங்கிய "உயிர்த்தெழும் காலத்துக்காக" என்ற தலைப்பில் 2001- இல் வெளியிடப்பட்ட நூலில் அமைந்துள்ளது.
* இப்பாடல் மொழியைத் தெய்வமாகக் கொண்டு அதை வணங்கி பாடப் பெற்ற பாடலாகும்.

## ஆசிரியர் குறிப்பு

கவிஞர் சு.வில்வரத்தினம், யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர். இவருடைய கவிதைகள் மொத்தமாக, 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்ற தலைப்பில் 2001இல் தொகுக்கப்பட்டன. இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர்.

1. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!
உனக்குப்
பல்லாண்டு
பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு

2. பாடத்தான் வேண்டும்!
காற்றிலேறிக்
கனைகடலை, நெருப்பாற்றை,
மலைமுகடுகளைக் கடந்து
செல் எனச் செல்லுமோர் பாடலை
கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்களின்
உரமெலாம் சேரப்
பாடத்தான் வேண்டும்!

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

சு. வில்வரத்தினம்

**அருஞ்சொற்பொருள்**

1. என் அம்மை - என் தாய்
2. ஒற்றியெடுத்த - வைத்து எடுத்த
3. நெற்றிமண் - திருநீறு
4. நிறைமணி - மணி போன்ற செல்வங்கள்
5. கனைகடலை - கனைத்தல் ஒலி எழுப்பும் கடலினை
6. கபாடபுரம் - இரண்டாம் தமிழ்ச்சங்கம் நடந்த இடம்
7. காவு - பலி
8. கனிமங்களின் - நூற்களின்
9. உரம் - வலிமை
10. யுகத்தினோர் - காலத்தின் ஒரு

**தெளிவுரை**

* தமிழாகிய என் தாயின் நெற்றியில் வைத்தத் திருநீறு அழகு! (திருநீறு என்பது அதன் சிறப்புகள் காலங்காலமாகத் தாயின் அடி தொழுதவர்களுக்குப் புகழ் எனும் பயன் விளைத்தவள்.) உழுதவர், விதைத்தவர், உழைத்தவர் என்பது பலவகையானும் தமிழுக்குத் தொண்டு செய்த புலவர்கள், மன்னர்கள், அறிஞர் பெருமக்களைக் குறித்தது. தமிழ்த்தாயே ! உன் பெருமைகளை, உன் புகழைப் பல்லாண்டுகள், பல ஆயிரம் ஆண்டுகள் போற்றிப் பாட வேண்டும்.
* கடல் கடந்து, ஆறு கடந்து, மலைகளையெல்லாம் கடந்து, இரண்டாம் தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த கபாடபுரத்தை ஆழிப்பேரலை கடல்கோள் அழித்த பின்னும், காலத்தால் இறவாத இலக்கண இலக்கியங்களை உடைய தமிழை நா வலிமை கொண்டு அதன் புகழைப் பாடத்தான் வேண்டும் (கனிமம் என்பது நூற்கள்).
* ஏடு தொடக்கி வைத்து, மண்ணிலே எழுத்து எழுத்தாக எழுதிய விரல் முனையைக் கொண்டு யுகத்தின் பாடலை அனைத்துத் திசைகளிலும் எழுத வேண்டும்.

## I. பலவுள் தெரிக:

**1 மதிப்பெண் வினாக்கள்**

**பாடநூல் வினா:**

1. 'கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள் - அடி மோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத
**விடை :** இ) கபாடபுரங்களை - காலத்தால்

**கூடுதல் வினாக்கள்:**

2. சு.வில்வரத்தினம் ________ எழுத்தாளர்.
அ) தமிழகத்து ஆ) ஈழத்து இ) அயல்நாட்டு ஈ) வடநாட்டு
**விடை :** ஆ) ஈழத்து

3. 2001 ல் வெளிவந்த சு.வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுப்பு எது?
அ) அகங்களும் முகங்களும் ஆ) காற்று வெளிக் கிராமம்
இ) காலத்துயர் ஈ) உயிர்த்தெழும் காலத்துக்காக
**விடை :** ஈ) உயிர்த்தெழும் காலத்துக்காக

4. "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை" என்று கூறியவர்
அ) பாரதிதாசன் ஆ) சு.வில்வரத்தினம்
இ) இரசூல் கம்சதோவ் ஈ) அப்துல் ரகுமான்
**விடை :** இ) இரசூல் கம்சதோவ்

5. மரபு சார்ந்த செய்யுட்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளை ________ என்பர்.
அ) மரபுக்கவிதை ஆ) புதுக்கவிதை இ) செய்யுள் ஈ) பாடல்கள்
**விடை :** ஆ) புதுக்கவிதை

6. கவிஞர் சு. வில்வரத்தினம் பிறந்த நாடு ______.
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) அந்தமான் தீவு ஈ) இலங்கை

விடை : ஈ) இலங்கை

7. வினையாலணையும் பெயர் - தெரிவு செய்க.
அ) கடந்து ஆ) தோய்த்து
இ) உழுதவர் ஈ) பல்லாண்டு பல்லாண்டு

விடை : இ) உழுதவர்

8. நெருப்பாற்றை - சொல்லுக்குரிய புணர்ச்சி விதியைத் தேர்க.
அ) ஈறுபோதல் இனமிகல்
ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
இ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்
ஈ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே, உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

விடை : ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

9. "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" என்ற விதிக்குரிய சொல்லைத் தேர்க.
அ) காவுகொண்ட ஆ) கனைகடல் இ) உரமெல்லாம் ஈ) தீட்டித்தீட்டி

விடை: ஈ) தீட்டித்தீட்டி

10. "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்" இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லுக்குரிய பொருளை எழுதுக.
அ) வலிமை ஆ) பலி இ) பளி ஈ) பழி

விடை : ஆ) பலி

## II. குறு வினாக்கள்:

2 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

1. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!

- இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.

* தொழுதவர் * உழுதவர்
* விதைத்தவர் * வியர்த்தவர்

போன்றன வினையாலணையும் பெயர்களாகும்.

2. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

"தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை", என்பது இரசூல் கம்சதோவின் இனம், மொழி குறித்த கூற்றாகும்.

### கூடுதல் வினாக்கள்:

3. சு.வில்வரத்தினத்தின் நூல்கள் யாவை?

* அகங்களும் முகங்களும் * காற்றுவெளிக் கிராமம்
* காலத்துயர் * நெற்றிமண்
* உயிர்த்தெழும் காலத்துக்காக * வாசிகம்

4. சு.வில்வரத்தினம் குறிப்பு வரைக.

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் | : | சு.வில்வரத்தினம் |
| பிறப்பு | : | 1950 |

| | | |
|---|---|---|
| ஊர் | : | யாழ்ப்பாணம் – புங்குடுத் தீவு |
| இறப்பு | : | 2006 |
| சிறப்பு | : | கவிதைகள் இயற்றுவதுடன், சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். இவருடைய கவிதைகள் மொத்தமாக உயிர்த்தெழும் காலத்துக்காக என்ற தலைப்பில் 2001- ல் தொகுக்கப்பட்டன. |

**5. மொழி குறித்து வரையறை தருக.**

* மொழி, மனித இனத்தின் ஆதி அடையாளம்.
* அது பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானது.
* ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவதும் மொழியே.
* மொழி, நம் இருப்பின் அடையாளம்.

**6. புதுக்கவிதை - விளக்கம் தருக.**

* மரபு சார்ந்த செய்யுட்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதை என்பர்.
* படிப்போரின் ஆழ்மனதில் ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.
* இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத் தன்மை கொண்டது.

## III. சிறு வினா:

4 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

**1. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

* பல ஆயிரம் ஆண்டு தமிழ்த்தாயின் புகழைப் பாட வேண்டும் என்கிறார்.
* காலங்காலமாகத் தன் (தமிழ்த்தாய்) அடி தொழுதவர்களுக்கு எல்லாம் புகழ் விளைத்த அவளை நாம் பாட வேண்டும் என்கிறார்.
* கடல் கடந்து, ஆறு கடந்து, மலைமுகடுகளையெல்லாம் கடந்து சென்று, இரண்டாம் தமிழ்ச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த கபாடபுரத்தை ஆழிப்பேரலை அழித்த பின்னும், காலத்தால் இறவாத இலக்கிய இலக்கண வளமுடைய தமிழை நா வலிமை கொண்டு நாம் அதன் புகழைப் பாட வேண்டும் என்கிறார்.

## IV. இலக்கணக்குறிப்பு:

| | | |
|---|---|---|
| 1. தொழுதவர், உழுதவர், விதைத்தவர் | – | வினையாலணையும் பெயர்கள் |
| 2. தீட்டித்தீட்டி | – | அடுக்குத்தொடர் |
| 3. கனைகடல் | – | வினைத்தொகை |
| 4. தொல்கனிமங்கள் | – | பண்புத்தொகை |
| 5. மலைமுகடு | – | ஏழாம் வேற்றுமைத் தொகை |
| 6. நிறைமணி | – | வினைத்தொகை |
| 7. விரல்முனை | – | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| 8. சாகாத, எழுகின்ற, எழுதுவித்த | – | பெயரெச்சங்கள் |
| 9. கடந்து, தோய்த்து, தொடக்கி | – | வினையெச்சங்கள் |
| 10. நெற்றி மண் | – | ஐந்தாம் வேற்றுமை உருபும், பயனும் உடன் தொக்க தொகை. |
| 11. வழி வழி | – | அடுக்குத் தொடர் |
| 12. தந்தவளே! | – | விளித்தொடர் |

## V. பகுபத உறுப்பிலக்கணம் தருக:

1. கடந்து – கட + த்(ந்) + த் + உ

கட – பகுதி
த் – சந்தி; ந் - ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

2. தொடக்கி – தொடக்கு + இ

தொடக்கு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

3. எழுகின்ற – எழு + கின்று + அ

எழு – பகுதி
கின்று – நிகழ்கால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

4. தோய்த்து – தோய் + த் + த் + உ

தோய் – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

5. அடுத்த – அடு + த் + த் + அ

அடு – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

6. வைத்து – வை + த் + த் + உ

வை – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

7. தீட்டி – தீட்டு + இ

தீட்டு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

## VI. புணர்ச்சி விதிகள்:

1. உரமெலாம் = உரம் + எலாம்

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| ★ | உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | உர (ம் + எ) லாம்<br>உரமெல்லாம் என்றானது. |

2. சுவரெலாம் = சுவர் + எலாம்

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| ★ | உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | சுவ (ர் + எ) லாம்<br>சுவரெலாம் என்றானது. |

3. பல்லாண்டு = பல் + ல் + ஆண்டு

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | பல சில எனும் இவை தம்முன் பிறவரின் அகரம் விகற்ப மாதலும் | பல் + ஆண்டு |
| 2. | தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் | பல் + ல் + ஆண்டு |
| 3. | உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ல் + ஆ = லா<br>பல்லாண்டு என்றானது |

4. நினதடி = நினது + அடி

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | நினத் + அடி |
| 2. | உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | நினதடி என்றானது |

5. ஒற்றியெடுத்த = ஒற்றி + எடுத்த

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | இ ஈ ஐ வழி யவ்வும் | ஒற்றி + ய் + எடுத்த |
| 2. | உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | ஒற்றியெடுத்த என்றானது |

6. நெருப்பாற்றை = நெருப்பு + ஆற்றை

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | நெருப் + ஆற்றை |
| 2. | உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | ப் + ஆ = பா<br>நெருப்பாற்றை என்றானது |

7. தீட்டித்தீட்டி = தீட்டி + தீட்டி

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| ★ | இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் | தீட்டி + த் + தீட்டி<br>தீட்டித்தீட்டி என்றானது |

## கற்பவை கற்றபின்

1. காலத்தை வென்ற மொழி என்னும் தலைப்பில் கவிதை படைக்க.

மொழி நம் நாட்டின் ஒரு அங்கம்
அவ்வங்கத்திற்கே பங்கம் வந்து சேர்ந்தது
இக்கணம்
இவற்றை மேம்படுத்த முயல்கிறது (முயல்வதே)
பிறநாட்டின் தலைக்கணம்
இத்தலைக்கணம் தகர்க்கவே
தலைத்தூக்குகிறது இன்றைய
இளைஞர்களின் போர்க்களம்
இக்களத்திலோ எத்தனையோ
குருதியின் துளிகள்
இத்துளிகளின் சத்தியத்தை நிரூபிக்கவே
காலத்தை வென்றது நம் தாய்மொழி

******



இயல் 1

# 02. பேச்சுமொழியும் கவிதைமொழியும்

உரைநடை

## I. பலவுள் தெரிக:

1 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
   அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
   ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை
   ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் எழுத்து மொழியும்
   அ) அ, ஆ ஆ) அ, ஈ இ) ஆ, ஈ ஈ) அ, இ
   **விடை :** இ) ஆ, ஈ

2. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.
   அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்
   ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை
   இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.
   ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.
   **விடை :** இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது

### கூடுதல் வினாக்கள்:

3. 'புல்லின் இதழ்கள்' என்ற நூலின் ஆசிரியர்
   அ) மல்லார்மே ஆ) பாப்லோ நெரூடா இ) வால்ட் விட்மன் ஈ) இந்திரன்
   **விடை :** இ) வால்ட் விட்மன்

4. கீழ்க்கண்டவற்றுள் இந்திரன் இயற்றிய கவிதைத் தொகுப்பு
   அ) வெளிச்சம்
   ஆ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
   இ) நுண்கலை
   ஈ) சாம்பல் வார்த்தைகள்
   **விடை :** ஈ) சாம்பல் வார்த்தைகள்

5. இந்திரனின் மொழிபெயர்ப்பு நூல் எது?
   அ) தமிழ் அழகியல்
   ஆ) முப்பட்டை நகரம்
   இ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
   ஈ) நுண்கலை
   **விடை :** இ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்

6. மொழிதான் 'ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது மொழி' என்றவர்
   அ) ஆற்றூர் ரவிவர்மா ஆ) இராசேந்திரன்
   இ) சங்கர் ஜெயராமன் ஈ) வெ.ஶ்ரீராம்
   **விடை :** அ) ஆற்றூர் ரவிவர்மா

7. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்
   அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே இ) இந்திரன் ஈ) பாப்லோ நெரூடா
   **விடை :** அ) வால்ட் விட்மன்

8. 2011 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற இந்திரனின் நூல் எது ?
   அ) தமிழ் அழகியல்
   ஆ) முப்பட்டை நகரம்
   இ) பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம்
   ஈ) சாம்பல்

விடை : இ) பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம்

## II. குறு வினாக்கள்:

2 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

1. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?

* இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறி விடுகிறது.
* எழுத்துமொழி அப்படியன்று. எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால் தான் பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

### கூடுதல் வினாக்கள்:

2. இந்திரன் எழுதிய நூல்கள் யாவை?

* பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
* முப்பட்டை நகரம்
* சாம்பல் வார்த்தைகள்
* தமிழ் அழகியல்
* நவீன ஓவியம்

3. வால்ட் விட்மனின் உலகப் புகழ் பெற்ற கவிதை நூல் எது?

* வால்ட் விட்மன் ஒரு கவிஞர். அமெரிக்காவைச் சேர்ந்தவர், இதழாளர், கட்டுரையாளர். புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.
* அவருடைய 'புல்லின் இதழ்கள்' (Leaves of grass) என்ற நூல் உலகப் புகழ் பெற்றது.

4. மொழி பற்றி எர்னஸ்ட் காசிரர் கூறியது யாது?

"மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன" என்று மொழி பற்றி எர்னஸ்ட் காசிரர் கூறினார்.

5. பேச்சுமொழி பற்றி மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா கூறுவது யாது?

* நேரடிமொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை; எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டும் இருக்கிறது.
* இம்மொழி தான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார்.

6. 'பாப்லோ நெரூடா' - குறிப்பு வரைக.

* 'பாப்லோ நெரூடா' தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில் பிறந்தவர்.
* 'பாப்லோ நெரூடா' இலத்தீன் அமெரிக்காவின் மிகச்சிறந்த கவிஞர்.
* தன்னுடைய கவிதைகளுக்காக 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.

7. இந்திரன் கூறும் மூன்று கவிஞர்கள் யாவர்?

* வால்ட் விட்மன்
* மல்லார்மே
* பாப்லோ நெரூடா

8. கவிதை நூலை மொழிபெயர்ப்புகள் செய்த மூவர் யாவர்?

* வால்ட் விட்மன் – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சங்கர் ஜெயராமன்
* மல்லார்மே – பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் : வெ.ஸ்ரீராம்
* பாப்லோ நெரூடா – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : ஆ. இரா. வேங்கடாசலபதி

**9. வால்ட் விட்மன் - குறிப்பு வரைக:**

* வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.
* கவிதை, இதழ், கட்டுரை, எனப் பல நிலைகளில் பன்முகத் திறன் உடையவர்.
* புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.
* 'புல்லின் இதழ்கள்' என்பது இவருடைய உலகப் புகழ் பெற்ற நூலாகும்.

**10. ஸ்டெஃபான் மல்லார்மே - குறிப்பு வரைக.**

* ஸ்டெஃபான் மல்லார்மே பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்.
* ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர்.
* குறியீட்டியத்தைத் தம் படைப்புகளில் கையாண்டவர்.

**11. எழுத்தாளர்களின் கடமை பற்றி மகாகவி பாரதி கூறுவன யாவை?** M-20

கலைகளின் உச்சம் கவிதை. அக்கவிதையினை, இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர் செய்யும் கடமை என்றும் பாரதி கூறினார்.

**12. "சொற்களில் பொருள் வேறுபாடுகளை ஏற்படுத்த முடியும்"- என்பது பற்றி இந்திரன் கூறுவன யாவை?**

உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன.அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பொருள் வேறுபாடுகளை ஏற்படுத்த முடியும் என்கிறார்.

**13. கவிஞனுடைய கவிதை மொழி அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக எப்போது மாறிவிடுகிறது?**

* எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சு மொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.
* எனவே தான் இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

**14. மொழியின் மூவகை நிலை குறித்து இந்திரன் கூறுவன யாவை?**

ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்து விடுகிறது. இது அச்சிடப்பட்ட ஒரு கவிதையாக மாறுகிறபோது என்னிலிருந்து பிரிந்து போய்விட்ட ஒரு பொருளாக மாறிவிடுகிறது என்கிறார்.

## III. சிறு வினாக்கள்: 4 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

**1. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.**

* எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்னும் படியாக நாடு முழுவதும் தமிழ் மொழி அனைத்துத் துறைகளிலும் முதன்மையாக, ஆட்சிமொழியாக வரவேண்டும்.
* விளம்பரப்பலகை, திரைப்படங்களின் தலைப்புகள், மக்களின் பெயர்கள் என அனைத்திலும் தமிழ்ப் பெயர்களே இடம்பெற வேண்டும்.
* தமிழ் மொழியில் எண்ணற்ற நூல்கள் உருவாக வேண்டும், பல சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் இடம்பெற வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

**2. கூற்று** - குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவு கூறத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

**கவிதை** - கூண்டு திறந்தது சிறகடிக்கவா? இல்லை! சீட்டெடுக்க.

**கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

**விடை :** * இந்தக்கூற்றில் குறியீடு என்பது அடிமையின் அல்லது கைதியின் வாழ்க்கை நிலையைக் குறிக்கிறது.

* கூண்டுக்கிளி அடைக்கப்பட்டிருக்கும் போது அதற்குச் சுதந்திரமில்லை. கூண்டு திறக்கப்படும் போதும் கூட அதற்குச் சுதந்திரமில்லை. கூண்டைத் திறப்பதே, சீட்டை எடுப்பதற்குத் தானே தவிர, அதனால் சிறகடித்துப் பறக்க முடியாது.

## கூடுதல் வினாக்கள்:

**3. பேச்சுமொழி பற்றி இந்திரன் கூறும் கருத்துகள் யாவை?**

* எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.
* இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறி விடுகிறது.
* எழுத்துமொழி அப்படியன்று, எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது.
* முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால் தான், பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

**4. மொழியின் தன்மையைப் பற்றி இந்திரன் கூறுவது யாது?**

* மொழி என்ற ஒன்று என்னுள் தோன்றியவுடன் தான் உலகம் என் கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது.
* எனது உலகத்தை இழையிழையாகப் பிரித்தும், வகுத்தும், தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்தும் கொடுத்தது மொழி. இதன் மூலமாக எனக்குள் உலகத்தின் பல கதவுகள் திறக்கலாயின. மொழியின் சாவியைப் போட்டுத் திறக்கின்ற போதெல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பலவற்றை நானே என் கண்களால் கண்டுபிடிக்கத் தொடங்கினேன்.
* அவற்றிற்கு நானே எனக்குப் பிடித்தமான பெயர்களைச் சூட்டத் தொடங்கினேன். பெயர்களுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி எனக்குக் கொடுத்தது. அவற்றை விதவிதமான அடுக்குகளில் ஒருமையாகவும் பன்மையாகவும் அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அடுக்கும் திறனை மொழி எனக்கு வழங்கியது.

**5. வாளினும் வலிமை உடையது மொழி என்பதாக இந்திரன் கூறுவனவற்றை விளக்குக.**

* ஒன்றை மொழிவழியாகப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின் மீது எனக்கான அதிகாரம் வந்துவிடுவதை உணர்கிறேன்.
* குழந்தையாக இருந்த போது "அம்மா அம்மா" என்று அழைப்பேன். வேலையில் மூழ்கிய அம்மா, என்னைக் கவனிக்காத போது திடீரென்று அவளது பெயரைச் சொல்லி அழைத்திருக்கிறேன். அவள் திடுக்கிட்டுத் திரும்பி என்னிடம் வந்திருக்கிறாா்.
* அப்போது தான் என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது ஓர் அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை உணரத் தலைப்பட்டேன் என்று இந்திரன் கூறுவதிலிருந்து மொழி வாளினும் வலிமையுடையதாகத் திகழ்கிறது.

**6. மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன யாவை?**

* உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை உணரமுடியும்.
* இது மட்டுமின்றி கை, கால் அசைவுகள், முகத்தின் தசைநார் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள், மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.

**7. வால்ட் விட்மன், நண்பர்கள் பற்றி தம் கவிதைகளில் கூறுவன யாவை?**

* உலகெலாம் திரண்டு வந்து ஒருசேரத் தாக்கினாலும் தோற்காத பெருநகரம் ஒன்று கண்டேன். அந்நகரம் என் கனவில் வந்தது. அதுதான் நண்பர்கள் எனும் புதுநகரம்.
* அன்பைவிடப் பெரிதாக ஒன்றுமில்லை. அந்நகரில், அன்பின் பாதையில் எல்லாரும் நடக்கத் தொடங்கினா்.
* எல்லா நேரமும் மனிதர்கள் செய்வது எதுவென்றாலும் அங்கு அன்பு மட்டும் தான் தெரிந்தது.
* மக்களின் தோற்றத்திலும் அன்பே வடிவமாகவும், அன்பே அவர்களின் மொழியாகவும் இருந்தது.

## IV. நெடுவினாக்கள்: 6 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

**1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.** M-20

* உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல் இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை உணரமுடியும். இது மட்டுமின்றி கை,கால் அசைவுகள் முகத்தின் தசைநார் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள், மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.
* எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.
* இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடன் கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறி விடுகிறது.
* எழுத்துமொழி அப்படியன்று, எழுதுவதை மனிதனின் கைதான் செய்கிறது.
* முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால் தான் பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

### கூடுதல் வினாக்கள்:

**2. மூன்று வகையான கவிஞர்கள் பற்றி இந்திரன் கூறும் கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.**

பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உண்டு.

**வால்ட் விட்மன்**

* முதல் வகையினர் வால்ட் விட்மனைப் போன்றவர்கள்.
* இவர்களுடைய கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லை விட முக்கியமானதாகி விடுவதில்லை. எழுத்துகள் எப்படிச் சொற்களில் கரைந்து போகின்றனவோ அதுபோன்று சொற்கள் கவிதைகளில் கரைந்து போவதில்லை.
* இவற்றில் சொற்கள் தங்களுக்குத் தாங்களே பேசிக்கொள்வதில்லை.
* இக்கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச் சுருளைப் போன்று அல்லாமல் பேச்சுமொழிக்கே உரிய தளர்வோடு கட்டப்பட்டவை.
* இதில் பல நேரங்களில் கவிதை, வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவி விடும்.

**கவிஞர் மல்லார்மே**

* இரண்டாம் வகையினர் மல்லார்மே போன்றவர்கள்.
* இவர்களுடைய பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அல்ல. மின்சார இரயிலின் நெருக்கத்தில் படியில் தொங்கிக்கொண்டு போகிறபோது, பரந்து கிடக்கும் தனிமையைச் சாட்சியாக வைத்துத் தங்களுக்குத் தாங்களே உதடு பிரித்துப் பேசிக்கொள்ளும் வகை.
* இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகின்றது. தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தனியே பேசிக்கொள்கிறது.
* குறியீடுகளின் கூட்டத்திற்கும், மொழிக்கும் இடையில் இருக்கும் வெளியில் புழங்குகிறது. குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று, நினைவுகூறத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

**பாப்லோ நெரூடா**

* மூன்றாவது வகையினர் ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய பாப்லோ நெரூடா போன்றவர்கள்.
* ஒரு கவிதை ஒரு பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அஃது அப்பொருளைப் பற்றியது அன்று. அது வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறது.
* ஒரு வடிவம் கொள்ளுதல் என்பதை நோக்கி முயல்கிறபோதும் அஃது இந்த முயற்சியில் ஒருபோதும் வெற்றி கொள்வதில்லை.
* இதுபோன்ற கவிதை எந்தவித முன்கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவது போலக் காட்டி உடனே எதையும் சுட்டாமல் முடிந்து போகிறது.
* அறியப்பட்டிராததை நோக்கி நகர்கிற அதே நேரத்தில் நெரூடாவின் கவிதை விரிந்ததாகவும் மையத்தை நோக்கி நகர்வதாகவும் இருக்கிறது.

இவ்வாறு இந்திரன் மூன்று வகையான கவிஞர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

******

இயல் 1

# 03. நன்னூல் - பாயிரம்

செய்யுள்

## நூற்குறிப்பு

நன்னூல், தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்ட வழிநூல் ஆகும். இது கி.பி 13 ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும். இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்து பகுதிகளாகவும், சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து பகுதிகளாகவும் அமைந்துள்ளன.

## ஆசிரியர் குறிப்பு

கவிஞர் சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக் கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்று பாயிரம் குறிப்பிடுகிறது. ஈரோடு மாவட்டம், மேட்டுப்புதூர் என்ற ஊரில் எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபாவின் கோவில் உள்ளது. இங்கே பவணந்தியாரின் உருவச் சிற்பம் இன்றும் உள்ளது.

### பாயிரம் இல்லது பனுவல் அன்றே

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம் 1

பாயிரம் பொது, சிறப்பு எனஇரு பாற்றே 2

நூலே நுவல்வோன் நுவலும் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம் 3

**ஆக்கியோன் பெயரே வழியே எல்லை**
**நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே**
**கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்**
**வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே * 47**

**காலம் களனே காரணம் என்றுஇம்**
**மூவகை ஏற்றி மொழிநரும் உளரே * 48**

ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே 54

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும்போல் — நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது. 55

- பவணந்தி முனிவர்

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| 1. நூன்முகம் | - நூலின் முகம் போன்றது |
| 2. இரு பாற்றே | - இரு வகைகளாக பிரிக்கப்பட்டதே |
| 3. நுவல்வோன் | - ஆசிரியர் |
| 4. நுவலும் திறனே | - கற்பிக்கும் திறமையே |
| 5. கொள்வோன் | - மாணவன் (கற்பவன்) |
| 6. கோடல் கூற்றாம் | - கற்கும் முறை |
| 7. யாப்பே | - இலக்கண முறையே |
| 8. ஆய்எண் பொருளும் | - ஆகிய எட்டு பொருட்களும் |
| 9. களனே | - களமே (அவை) |
| 10. மொழிநரும் உளரே | - கூறுவோரும் உள்ளனரே |
| 11. அகன்றது ஆயினும் | - விரிவாகக் கூறினாலும் |
| 12. பனுவல் அன்றே | - நல்ல நூல் இல்லை |
| 13. மாடம் | - மாளிகை |
| 14. ஆடமைத் தோள் | - மூங்கில் போன்ற அழகிய தோள்களைக் கொண்ட |
| 15. ஐதுரையா நின்ற | - அணிந்துரையாக இருக்கும் |
| 16. பெய்துரையா வைத்தார் | - பெருமையான உரையாக வைத்தனர் |

## தெளிவுரை

* முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை ஆகிய ஏழும் பாயிரத்திற்குரிய வேறுபெயர்களாகும்.
* பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என இரண்டு வகைப்படும்.
* நூலின் இயல்பு, ஆசிரியர் திறன், கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரமாகும்.
* நூல் இயற்றியோர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர். தொகை, வகை, விரி என இவற்றுள் எதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு, நூல் குறிப்பிடும் கருத்து. நூலைக் கேட்போர் மற்றும் அதைக் கற்பதால் பெறுகின்ற பயன் ஆகிய எட்டையும் தெரிவிப்பது சிறப்புப்பாயிரம்.
* நூல் இயற்றப்பட்ட காலம், அது அரங்கேற்றப்பட்ட அவைக்களம், அது இயற்றப்பட்டதற்கான காரணம் என்னும் இம்மூன்றையும் மேலே கூறப்பட்டுள்ள எட்டுச் செய்திகளுடன் சேர்த்துக் கூறுவோரும் உள்ளனர்.
* ஆயிரம் முகத்தைப் பெற்றது போல, பல்வேறு வகையான துறைச் செய்திகளை மிக விரிவாகக் கூறினாலும் முன்னுரை (பாயிரம்) நூலுக்கு இல்லையானால் அது சிறந்த நூலாக மதிக்கப் படாது.
* மாடங்களுக்கு ஓவியங்கள் அழகைத் தருவன, நகரங்களுக்குக் கோபுரங்கள் அழகைத் தருவன. மூங்கில் போன்ற அழகிய தோள்களைக் கொண்ட மகளிருக்கு அணிகலன்கள் அழகைத் தருவன. அவை போன்று எல்லா நூல்களுக்கும் முன்னர் அழகு தருவதற்காக அணிந்துரையைப் புலவர்கள் பெருமையுடன் சேர்த்து வைத்தனர்.

## I. பலவுள் தெரிக: 

1 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

1. பாயிரம் இல்லது ______ அன்றே.

அ) காவியம்  ஆ) பனுவல்  இ) பாடல்  ஈ) கவிதை

**விடை :** ஆ) பனுவல்

### கூடுதல் வினாக்கள்:

2. தமிழில் கிடைத்த முதல் இலக்கண நூல் ______

அ) அகத்தியம்  ஆ) நன்னூல்

இ) தொல்காப்பியம்  ஈ) இலக்கண விளக்கம்

**விடை :** இ) தொல்காப்பியம்

3. பாயிரம் ______ வகைப்படும்.

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) இரண்டு

விடை : ஈ) இரண்டு

4. நன்னூலின் ஆசிரியர் ______.

அ) விளம்பிநாகனார் ஆ) பவணந்தி முனிவர்

இ) தொல்காப்பியர் ஈ) புத்தமித்ரர்

விடை : ஆ) பவணந்தி முனிவர்

5. பாயிரத்திற்குரிய பெயர்கள் ______வகைப்படும்.

அ) ஏழு ஆ) ஆறு இ) நான்கு ஈ) ஐந்து

விடை : அ) ஏழு

6. நூலின் பெருமை முதலியவற்றை விளக்குவது ______.

அ) முகவுரை ஆ) பதிகம் இ) அணிந்துரை ஈ) புனைந்துரை

விடை : ஈ) புனைந்துரை

7. நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது ______.

அ) நான்முகம் ஆ) புறவுரை இ) தந்துரை ஈ) முகவுரை

விடை : இ) தந்துரை

8. நூலின் தொகை, வகை, விரி போன்றவற்றைக் குறிப்பிடுவது ______.

அ) பொதுப் பாயிரம் ஆ) சிறப்புப் பாயிரம்

இ) முகவுரை ஈ) நான்முகம்

விடை : ஆ) சிறப்புப் பாயிரம்

9. நன்னூல் ______ நூல் வகையைச் சார்ந்தது.

அ) முதல் ஆ) வழி இ) சார்பு ஈ) இலக்கணம்

விடை : ஆ) வழி

10. நன்னூல் இயற்றப் பெற்ற காலம் ______.

அ) கி.பி.14 ஆ) கி.பி.11 இ) கி.பி.13 ஈ) கி.பி.12

விடை : இ) கி.பி.13

11. நன்னூலில் உள்ள பகுதிகளின் எண்ணிக்கை ______.

அ) 5 ஆ) 15 இ) 10 ஈ) 20

விடை : இ) 10

12. பவணந்தி முனிவர் நன்னூலை யார் கேட்டுக் கொண்டதால் இயற்றினார்?

அ) விசாகப்பெருமாள் ஆ) சீயகங்கன்

இ) நந்திவர்மன் ஈ) 2 ஆம் குலோத்துங்கன்

விடை : ஆ) சீயகங்கன்

13. எல்லா வகையான நூல்களுக்கும் அழகு தருவதாக வைக்கப்படுவது ______.

அ) அணிந்துரை ஆ) முகவுரை இ) தந்துரை ஈ) பதிகம்

விடை : அ) அணிந்துரை

14. 'அமை' என்ற சொல்லின் பொருள் ______.

அ) மாளிகை ஆ) மேடை இ) மூங்கில் ஈ) திரைச்சீலை

விடை : இ) மூங்கில்

15. சொல்லதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இயல்கள் ______

அ) ஐந்து ஆ) பத்து இ) இரண்டு ஈ) நான்கு

விடை : அ) ஐந்து

16. தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு கி.பி 13 ல் இயற்றப்பட்ட வழி நூல் ______

அ) வீரசோழியம் ஆ) அகத்தியம்

இ) நன்னூல் ஈ) தண்டியலங்காரம்

விடை : இ) நன்னூல்

17. பாயிரம் இல்லது பனுவல் அன்றே
இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல் குறிக்கும் பொருளை எழுதுக.

அ) எழுத்து ஆ) பொருள்
இ) சொல் ஈ) நூல்

விடை : ஈ) நூல்

## II. குறுவினாக்கள்: 2 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

**1. 'பாயிரம்' பற்றி நீ அறியும் கருத்து யாது?** M-19

நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும்.

### கூடுதல் வினாக்கள்:

**2. பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்கள் யாவை?**

* முகவுரை * நூன்முகம் * பதிகம் * புறவுரை * புனைந்துரை * அணிந்துரை * தந்துரை

**3. பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

* பாயிரம் இரண்டு வகைப்படும்.
* அவை i) பொதுப்பாயிரம் ii) சிறப்புப்பாயிரம்

**4. பொதுப் பாயிரம் கூறுவது எவற்றை?**

i) நூலின் இயல்பு ii) ஆசிரியர் இயல்பு iii) கற்பிக்கும் முறை
iv) மாணவர் இயல்பு v) கற்கும் முறை - ஆகிய ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம்.

**5. அணிந்துரையின் சிறப்பை நன்னூலார் வழி கூறுக**

* மாளிகைகளுக்கு ஓவியங்களும், பெரிய நகரங்களுக்குக் கோபுரங்களும், அழகிய தோள்களைக் கொண்ட மகளிருக்கு அணிகலன்களும் எழிலைத் தரும்.
* அவை போன்று எல்லா வகை நூல்களுக்கும் முன்னர் அழகு தருவதற்காக அணிந்துரையைப் புலவர்கள் பெருமையுடன் சேர்த்து வைத்தனர்.

**6. பவணந்தி முனிவர் - குறிப்புத் தருக.**

* கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட நன்னூல் தமிழ் இலக்கண நூலாகும்.
* சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்று பாயிரம் குறிப்பிடுகிறது.

**7. பாயிரத்தின் சிறப்பைப் பற்றி பவணந்தி கூறுவன யாவை?**

ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக் கூறினாலும் பாயிரம் இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது என்கிறார் பவணந்தி.

## III. சிறு வினாக்கள்: 4 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

**1. நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

நன்னூல் குறிப்பிடும் முகவுரைக்குரிய ஏழு பெயர்கள்:

(i) முகவுரை – நூலுக்கு முன் சொல்லப்படுவது
(ii) பதிகம் – ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பல்வகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்வது
(iii) அணிந்துரை – நூலுக்கு அழகு தருவது அணிந்துரை
(iv) புனைந்துரை – நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது
(v) நூன்முகம் – நூலுக்கு முகம் போல முற்பட்டிருப்பது
(vi) புறவுரை – நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்திலே சொல்வது
(vii) தந்துரை – நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது

**கூடுதல் வினாக்கள்:**

**2. சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் யாது?**

* நூலாசிரியர் பெயர்
* நூல் பின்பற்றிய வழி
* நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
* நூலின் பெயர்
* தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு
* நூலில் குறிப்பிடப்படும் கருத்து
* நூலைக் கேட்போர் நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்

ஆகிய எட்டுச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்.

**3. நன்னூல் - நூற்குறிப்புத் தருக.**

* நன்னூல் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும்.
* இந்நூல் தொல்காப்பியத்தை முதன் நூலாகக் கொண்ட வழி நூல் ஆகும்.
* இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டாகும்.
* இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.
* எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்து பகுதிகளாகவும்.
* சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து பகுதிகளாகவும் அமைந்துள்ளன.
* சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக் கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்று பாயிரம் குறிப்பிடுகிறது.

## IV. நெடுவினா: 6 மதிப்பெண் வினாக்கள்

**பாடநூல் வினா:**

**1. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.**

* பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு வகைப்படும்.

**பொதுப் பாயிரம்:**

* நூலின் இயல்பு
* ஆசிரியர் இயல்பு
* கற்பிக்கும் முறை
* மாணவர் இயல்பு
* கற்கும் முறை - ஆகிய ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம்.

**சிறப்புப் பாயிரம்:**

* நூலாசிரியர் பெயர்
* நூல் பின்பற்றிய வழி
* நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
* நூலின் பெயர்
* தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு
* நூலில் குறிப்பிடப்படும் கருத்து
* நூலைக் கேட்போர் நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன் ஆகிய எட்டுச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆகும்.
* மாளிகைகளுக்கு ஓவியங்களும், பெரிய நகரங்களுக்குக் கோபுரங்களும் அழகிய தோள்களைக் கொண்ட மகளிருக்கு அணிகலன்களும் எழிலைத் தரும். அவை போன்று எல்லாவகை நூல்களுக்கும் முன்னர் அழகு தருவதாக அணிந்துரையைப் புலவர்கள் பெருமையுடன் சேர்த்து வைத்தனர்.

Don

## V. இலக்கணக் குறிப்பு:

1. மாநகர் – உரிச்சொற்றொடர்
2. காட்டல், கோடல் – தொழிற்பெயர்கள்
3. கேட்போர், கொள்வோன், நுவல்வோன், ஆக்கியோன், மொழிநர், வைத்தார் – வினையாலணையும் பெயர்கள்
4. நூன்முகம், நூற்பெயர் – ஆறாம் வேற்றுமைத் தொகைகள்
5. பொருளும் ஐந்தும், சித்திரமும் கோபுரமும் – முற்றும்மைகள்

## VI. பகுபத உறுப்பிலக்கணம்:

**1. ஏற்றி – ஏற்று + இ**

ஏற்று – பகுதி
இ – வினையெச்ச விகுதி

**2. நின்ற – நில் (ன்) + ற் + அ**

நில் – பகுதி (ல் - ன் ஆனது விகாரம்)
ற் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

**3. வைத்தார் – வை + த் + த் + ஆர்**

வை – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

**4. காட்டல் – காட்டு + அல்**

காட்டு – பகுதி
அல் – தொழிற் பெயர் விகுதி

## VII. புணர்ச்சி விதிகள்:

**1. தந்துரை = தந்து + உரை**

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் | தந்த் + உரை |
| 2. | உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | த் + உ = து<br>தந்துரை என்றானது |

**2. பொதுப்பாயிரம் = பொது + பாயிரம்**

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| ★ | இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் | பொது + ப் + பாயிரம்<br>பொதுப்பாயிரம் என்றானது |



Don

3. அணிந்துரை — அணிந்து + உரை

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் | அணிந்த் + உரை |
| 2. | உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | த் + உ = து<br>அணிந்துரை என்றானது |

4. எண் பொருள் = எட்டு + பொருள்

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று<br>உயிர்மெய் கெடும் | எட் + பொருள் |
| 2. | எட்டன் உறுப்பு ணவ்வாகும் | எண் + பொருள்<br>எண்பொருள் என்றானது |

5. மூவகை = மூன்று + வகை

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று<br>உயிர்மெய் கெடும் | மூன் + வகை |
| 2. | மூன்றன் உறுப்பு அழிவு வந்ததும் ஆகும் | மூ + வகை<br>மூவகை என்றானது |

6. நூற்பெயர் = நூல் + பெயர்

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| ★ | லள வேற்றுமையில் றடவும் ஆகும் | நூற் + பெயர்<br>நூற்பெயர் என்றானது |

7. பெய்துரை = பெய்து + உரை

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| 1. | உயர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | பெய்த் + உரை |
| 2. | உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | த் + உ = து<br>பெய்துரை என்றானது |

******



இயல் 1

# 04. ஆறாம் திணை

- அ. முத்துலிங்கம்

துணைப்பாடம்

## I. பலவுள் தெரிக:

1 மதிப்பெண் வினாக்கள்

### கூடுதல் வினாக்கள்:

1. டேனியல் டிஃபோ எழுதிய நூல்
   அ) ராபின்சன் குரூசோ ஆ) லாங் வாக் டூ ஃபிரீடம்
   இ) டெவில் இன் தி மில்க் ஈ) அங்கிள் டாம்ஸ் கேபின்
   **விடை :** அ) ராபின்சன் குரூசோ

2. கொழும்பில் கலவரம் வந்த ஆண்டு
   அ) 1957 ஆ) 1958 இ) 1968 ஈ) 1978
   **விடை :** ஆ) 1958

3. அ.முத்துலிங்கம் குறிப்பிடும் ஆறாவது திணை
   அ) மலையும் மலைசார்ந்த இடமும் ஆ) காடும் காடுசார்ந்த இடமும்
   இ) பனியும் பனிசார்ந்த இடமும் ஈ) கடலும் கடல் சார்ந்த இடமும்
   **விடை :** இ) பனியும் பனிசார்ந்த இடமும்

4. 'ராபின்சன் குரூசோ' என்ற நூலை இயற்றியவர் ______
   அ) வ.ஐ.ச.ஜெயபாலன் ஆ) அ.முத்துலிங்கம்
   இ) டேனியல் டிஃபோ ஈ) பாப்லோ நெருடா
   **விடை :** இ) டேனியல் டிஃபோ

5. 'ஆறாம் திணை' ஆசிரியர் ______
   அ) ஜெயமோகன் ஆ) முத்துலிங்கம் இ) சி.த.செல்லப்பா ஈ) பிரபஞ்சன்
   **விடை :** ஆ) முத்துலிங்கம்

6. அ.முத்துலிங்கம் இலங்கையில் ______ என்றும் இடத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்தார்
   அ) மவுண்லவினியா ஆ) ஈழம் இ) கொழும்பு ஈ) சிலோன்
   **விடை :** அ) மவுண்லவினியா

7. கீழ்க்கண்ட சிறுகதைத் தொகுப்புகளுள் அ. முத்துலிங்கம் எழுதாதது எது ?
   அ) அக்கா ஆ) திகடசக்கரம்
   இ) மகாராஜாவின் ரயில்வண்டி ஈ) குறட்டை ஒலி
   **விடை :** ஈ) குறட்டை ஒலி

8. சிங்கப்பூரில் சட்டவிரோதமாகத் தங்குபவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை______
   அ) பிரம்படி ஆ) சிறைத்தண்டனை இ) துப்பாக்கிச்சூடு ஈ) அபராதம்
   **விடை :** அ) பிரம்படி

## II. குறுவினா:

2 மதிப்பெண் வினாக்கள்

### கூடுதல் வினாக்கள்:

1. அ.முத்துலிங்கம் குறிப்பு வரைக.

| | |
|---|---|
| ஆசிரியர் பெயர் | : அ.முத்துலிங்கம் |
| ஊர் | : யாழ்ப்பாணம் – கொக்குவில் கிராமம் |
| தற்போது வசிக்குமிடம் | : கனடா |
| நூல்கள் | : அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் (சிறுகதைத் தொகுப்புகள்) |
| பரிசு | : வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றவர்.<br>"வடக்கு வீதி' என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999 இல் இலங்கை அரசின் சாகித்திய அகாதெமி பரிசையும் பெற்றவர். |

## III. நெடுவினா:

### பாடநூல் வினா:

1. தமிழர் வாழ்வோடும் புலம் பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**மனதுக்குச் சொன்னவை:**

முத்துலிங்கம் அவர்கள் இலங்கையில் மவுண்லவினியா என்னும் இடத்தில் பிரீஸ் என்பவரின் வாடகை வீட்டில் குடியிருந்தார். அது சிங்களர்கள் வாழும் பகுதி. 1958 ஆம் ஆண்டு கலவரம் கொழும்புக்கு வந்து அந்த வீடு தாக்கப்படும் நிலையில் இருந்தது. ஆனால், சிங்களர் பிரீஸ் அவரைக் காப்பாற்றினார். ஆனால் மற்ற தமிழர்களின் வீடுகள் அடித்து உடைக்கப்பட்டிருந்தன. பின்பு அகதி முகாமில் தங்கியிருந்தார். உடைக்கும் உணவுக்கும் மிகப்பெரிய போராட்டம்; அப்போது அவர் தம் மனத்துக்குள் "இந்த நாளை நன்றாக ஞாபகம் வை, இதுவே உன் வாழ்நாளில் மிகக் கீழேயான தருணம். இனிமேல் இப்படி ஒரு கணம் உன் வாழ்க்கையில் வராமல் பார்த்துக் கொள்" என்று சொல்லிக் கொண்டார்.

**உலக அரங்கில் தமிழ்:**

புலம்பெயர் தமிழர்களின் இரண்டாம் தலைமுறை, தமிழைக் கைவிட்டுவிடும் என்ற பொதுவான குற்றச்சாட்டு இருக்கிறது. இன்றைய கணினி யுகத்தில் தமிழ் கற்பது இலகுவாகிவிட்டது. புலம் பெயர் நாடுகளில் தமிழ் கற்க முனையும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இது தான் உண்மை நிலை. இவர்களில் சிலராவது உயர்ந்த இலக்கியங்கள் படைத்துத் தமிழை உலக அரங்கில் முன்னிறுத்துவார்கள்.

**புலம் பெயர் தமிழர்கள்:**

தமிழர்கள் எட்டுக் கோடிப் பேர் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். நியூசிலாந்திலிருந்து அலாஸ்கா வரை பரந்து போய் புலம் பெயர் தமிழர்கள் பத்து இலட்சம் பேர் வாழ்கிறார்கள். கனடாவில் மட்டும் மூன்று இலட்சம் பேர் வாழ்கிறார்கள். 2012 ஆம் ஆண்டு தொடங்கி வரும் எல்லா வருடங்களிலும் ஜனவரி 14ஆம் நாள், தமிழர் பாரம்பரிய நாள் எனப் பிரகனப்படுத்தப்பட்டிருக்கிறது. கனடாவில் ஒரு புதிய சாலை ஒன்றிற்கு 'வன்னி வீதி' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. அழிக்க முடியாத இந்த வீதி என்றென்றைக்குமாகக் கனடாவில் ஈழத்தமிழரின் புலம்பெயர் வரலாற்றை நினைவுபடுத்தியபடியே நிற்கும்.

**ஆறாம் திணை:**

ஐங்குறுநூறு ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடலாக ஐந்நூறு பாடல்களைக் கொண்டது. அந்நூலில் பனியும் பனி சார்ந்த நிலத்துக்கும் பாடல்கள் இல்லை. புலம் பெயர்ந்த பத்து இலட்சம் மக்கள் சென்றடைந்தது ஆறாவது திணையான பனிப் பிரதேசங்களுக்குத் தான்.

**ஆறுமணிக்குருவி:**

அவருடைய கிராமமான கொக்குவில்லில் காகம் இருந்தது. ஆறுமணிக்குருவியும் இருந்தது. காகம் பறக்கும் எல்லை இரண்டு மைல் தூரம். ஆறு மணிக்குக் கத்தும் இந்த ஆறுமணிக்குருவிக்கு எல்லையே கிடையாது. இமயமலைக்குப் பறந்து போய் மீண்டும் திரும்பும். ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் இந்த ஆறுமணிக்குருவி போல. அவர்களுக்கு எல்லையே கிடையாது. அவர்கள் உலகம் பனியும் பனி சார்ந்த நிலமும். ஆம் ஆறாம் திணை,
என்று அ.முத்துலிங்கம் தமது ஆறாம்திணை வாயிலாகக் குறிப்பிடுகிறார்.

### கூடுதல் வினாக்கள்:

2. ஆறாம் திணை புதினச் சுருக்கத்தினை ஆசிரியரிடம் நேர்காணல் வடிவத்தில் எழுதுக.

**காட்சி : 1**

நிருபர் : வணக்கம், உங்களை நேர்காணல் செய்வதில் மகிழ்ச்சி. உங்கள் இலங்கை வாழ்க்கையைப் பற்றி கூறுங்களேன்.

ஆசிரியர் : நாங்கள் இலங்கையில் வாடகை வீட்டில் குடியிருந்தோம். அவருடைய பெயர் பிரீஸ், அவருக்குத் தமிழ் தெரியாது, எனக்குச் சிங்களம் தெரியாது.

நிருபர் : அப்படியா சரி ஐயா, இலங்கையில் அப்போது என்ன நடந்தது?

ஆசிரியர் : 1958 மே மாதம் ஒரு கலவரம். கொழும்பு வரை வந்த அந்தக் கலவரத்திலிருந்து என்னையும் என் அண்ணனையும் பிரீஸ் தான் காப்பாற்றினார். அப்போது நாங்கள் மட்டும் தான் தப்பினோம்.

நிருபர் : பிறகு என்ன நடந்தது ஐயா?

ஆசிரியர் : போலீஸ் வாகனம் எங்களையும் மற்றவர்களையும் ஒரு முகாமிற்கு அழைத்துச் சென்றது. உடன் எடுத்துச் செல்ல ஒரு பெட்டி மட்டும்தான் கொண்டு செல்ல வேண்டும் என்று கட்டளை இட்டனர்.

நிருபர் : சரி! எதைத் தான் எடுத்துச் சென்றீர்கள்?

ஆசிரியர் : டேனியல் டிஃபோ எழுதிய 'ராபின்சன் குரூசோ' என்ற ஒரு நூலை மட்டும் எடுத்துக்கொண்டேன்.

நிருபர் : அப்படியா? ஒரு புத்தகம் மட்டும் தானா? (என்று கேட்டுவிட்டு நூலின் அருமையை ஒரு முறை எண்ணி வியந்தார். வள்ளுவரின் 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்ற குறள் இவருக்கு நினைவுக்கு வந்தது)

ஆசிரியர் : ஆம்.

நிருபர் : ஐயா, முகாமில் எத்தனைப் பேர் இருந்தீர்கள்? அப்போது உங்களுக்கு உணவு உடை கிடைத்ததா?

ஆசிரியர் : 2000 பேர். போராட்டம் தான். சாப்பாட்டிற்காக நெடுநேரம் நின்றேன். 'இந்த நாளை நன்றாக ஞாபகம் வை. இதுவே உன் வாழ்நாளில் மிகக் கீழேயான தருணம்.இனிமேல் இப்படி ஒரு கணம் உன் வாழ்க்கையில் வராமல் பார்த்துக் கொள்' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

### காட்சி : 2

நிருபர் : ஐயா, கனடாவிற்கு நீங்கள் புலம் பெயர்ந்தது போல.. மற்றவர்கள்...?

ஆசிரியர் : கனடாவில் மட்டும் மூன்று இலட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். நியூசிலாந்து முதல் அலாஸ்கா வரை பத்து இலட்சம் பேர் புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி உலகம் முழுவதும் எட்டுக் கோடி இருக்கிறார்கள்.

நிருபர் : ஐயா, இவ்வளவு பேரும் அகதிகளா? நம்பவே முடியவில்லை! அப்பிடினா எத்தனை நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள்?

ஆசிரியர் : அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்கிறார்கள்! ஃபாரன்ஹீட் 451 நூல், என்ன சொல்கிறது தெரியுமா? ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூல்களை எரித்தால் போதும். அவர்கள் அறிவு மேலும் வளர்வதற்கு முடியாமல் நின்று விடும் என்கிறது.

நிருபர் : மிக அருமை ஐயா.

ஆசிரியர் : வன்னி என்பது இலங்கையில் இருக்கும் சில நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பு. அந்தப் பெயரைத் தான் கனடாவில் உள்ள ஒரு வீதிக்கு வைத்திருக்கிறார்கள்.

நிருபர் : நன்றி ஐயா, உங்களின் வாழ்க்கைப் பயணம், புலம்பெயர்ந்தோரின் இன்னல்கள் மற்றும் தமிழர் வாழ்க்கை பற்றி நன்றாக அறிந்து கொண்டேன்.
(என்று நன்றி கூறி இருவரும் ஒருவரை ஒருவர் வாழ்த்துச் சொல்லிக் கொண்டு விடைபெற்றனர்)

******

Don



இயல் 1

# 05. மொழி முதல், இறுதி எழுத்துகள்

இலக்கணம்



## I. பலவுள் தெரிக:

1 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

1. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   - அ) அன்னம், கிண்ணம்
   - ஆ) டமாரம், இங்ஙனம்
   - இ) ரூபாய், லட்சாதிபதி
   - ஈ) றெக்கை, அங்ஙனம்

   **விடை :** அ) அன்னம், கிண்ணம்

### கூடுதல் வினாக்கள்:

2. மொழி முதல் எழுத்துகள்
   - அ) 24
   - ஆ) 22
   - இ) 12
   - ஈ) 11

   **விடை :** ஆ) 22

3. மொழி இறுதி எழுத்துகள்
   - அ) 12
   - ஆ) 22
   - இ) 24
   - ஈ) 11

   **விடை :** இ) 24

4. தவறான இணையைத் தேர்வு செய்க.
   - அ) மலை + கருவி = உயிர் + மெய்
   - ஆ) தமிழ் + அன்னை = மெய் + உயிர்
   - இ) தென்னை + மரம் = உயிர் + உயிர்
   - ஈ) தேன் + மழை = மெய் + மெய்

   **விடை :** இ) தென்னை + மரம் = உயிர் + உயிர்

5. குற்றியலுகரம் அல்லாத சொல்லைத் தேர்க.
   - அ) அச்சுப்பலகை
   - ஆ) பஞ்சுப்பொதி
   - இ) வீடில்லை
   - ஈ) பொதுத்தமிழ்

   **விடை :** ஈ) பொதுத்தமிழ்

6. வினை பெயர்த் தொடரைக் கண்டறிக.
   - அ) படித்த + நூல்
   - ஆ) தமிழ் + படி
   - இ) தமிழ் + சொல்
   - ஈ) கனி + சாறு

   **விடை :** அ) படித்த + நூல்

7. உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தைத் தேர்ந்து எழுதுக.
   - அ) அச்சு + பலகை
   - ஆ) முரடு + காளை
   - இ) வீடு + இல்லை
   - ஈ) மார்பு + கூடு

   **விடை :** ஆ) முரடு + காளை

8. வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது ______
   - அ) மெய்ம் முதல்
   - ஆ) பெயர் முதல்
   - இ) உயிர்முதல்
   - ஈ) வினை முதல்

   **விடை :** இ) உயிர்முதல்

9. பொருத்தமற்ற சொல்லைத் தேர்வு செய்க.
   - அ) பெயர்ச்சொல்
   - ஆ) வினைச்சொல்
   - இ) இடைச்சொல்
   - ஈ) திரிச்சொல்

   **விடை :** ஈ) திரிச்சொல்

10. தற்பொழுது தமிழகத்தில் வழக்கில் இல்லாத சொல் எது?

அ) இங்ஙனம் ஆ) உங்ஙனம்

இ) எங்ஙனம் ஈ) அங்ஙனம்

விடை : ஆ) உங்ஙனம்

11. பள்ளி + கூடம் - எழுத்துகளின் அடிப்படைப் புணர்ச்சி ______

அ) உயிர் + உயிர் ஆ) மெய் + மெய்

இ) உயிர் + மெய் ஈ) மெய் + உயிர்

விடை : இ) உயிர் + மெய்

12. குற்றியலுகர எழுத்துகளில் மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்______

அ) க,ச ஆ) ப,த இ) த,ப ஈ) ட,ற

விடை : ஈ) ட,ற

## II. குறு வினாக்கள்: 2 மதிப்பெண் வினாக்கள்

### பாடநூல் வினா:

1. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?

நிலைமொழி ஈற்று

உயிரெழுத்து = குற்றியலுகர ஈறு
பன்னிரெண்டு = குற்றியலுகர ஈறு
திருக்குறள் = மெய்யெழுத்து ஈறு
நாலடியார் = மெய்யெழுத்து ஈறு

### கூடுதல் வினாக்கள்:

2. மொழிக்கு முதலில் வராத எழுத்துகள் எவை?

ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை. ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

3. மொழிக்கு இறுதியில் வராத எழுத்துகள் எவை?

க், ச், ட், த், ப், ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வராது.

## III. சிறு வினாக்கள்: 4 மதிப்பெண் வினாக்கள்

### கூடுதல் வினாக்கள்:

1 எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சித் தொடர்களைக் காண்க.

| வ. எண். | ஈற்றெழுத்து முதலெழுத்து | எ.கா | சந்திப்பு |
|---|---|---|---|
| 1. | உயிர் + உயிர் | மலை + அருவி | ஐ + அ |
| 2. | மெய் + உயிர் | தமிழ் + அன்னை | ழ் + அ |
| 3. | உயிர் + மெய் | தென்னை + மரம் | ஐ + ம் |
| 4. | மெய் + மெய் | தேன் + மழை | ன் + ம் |

2. சொற்களின் அடிப்படையில் புணர்ச்சித் தொடர்களைக் காண்க.

| வ. எண். | நிலைமொழி வருமொழி | எ.கா | தொடர் வினை |
|---|---|---|---|
| 1. | பெயர் + பெயர் | கனி + சாறு | பெயர்த் தொடர் |
| 2. | பெயர் + வினை | தமிழ் + படி | வினைத் தொடர் |
| 3. | வினை + வினை | நடந்து + செல் | வினைத் தொடர் |
| 4. | வினை + பெயர் | படித்த + நூல் | பெயர்த் தொடர் |

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. தவறான இணையைத் தேர்வு செய்க.** M-20

அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்

ஆ) கடல் + அலை – உயிர் + மெய்

இ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்

ஈ) மண் + வளம் – மெய் + மெய்

**விடை :** ஆ) கடல் + அலை – உயிர் + மெய்

**2. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**




அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3)

**விடை :** அண்ணா

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10)

**விடை :** கலியாண சுந்தரனார்

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் (6)

**விடை :** பாரதிதாசன்

ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் (2)

**விடை :** ஜீவா

**3. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

**விடை :** விடியற்காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

**விடை :** முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.

**விடை :** காலத்திற்கேற்ற படி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாகப் பதிய வைக்கனும்.

**விடை :** ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.

உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

**விடை :** தேர்வெழுத வேகமாகப் போகவேண்டும். நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்

**4. வினாக்கள்:**

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

**மொழி முதல் எழுத்துகள் – 22**

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
2. மெய்களில் க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாகச் சொல்லின் முதலில் வரும் (ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும்)

சான்று:

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ | - | அம்பு | ஐ | - | ஐந்து | த | - | தந்தம் |
| ஆ | - | ஆடை | ஒ | - | ஒன்று | ந | - | நரி |
| இ | - | இலை | ஓ | - | ஓடை | ப | - | பலம் |
| ஈ | - | ஈசல் | ஔ | - | ஔவை | ம | - | மரம் |
| உ | - | உடுக்கை | க | - | கயல் | ய | - | யவனர் |
| ஊ | - | ஊஞ்சல் | ங | - | ஙனம் | வ | - | வண்டு |
| எ | - | எடை | ச | - | சங்கம் | | | |
| ஏ | - | ஏரி | ஞ | - | ஞமலி | | | |

**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.**

**மொழி இறுதி எழுத்துகள் = 24**

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும்.
2. மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினோரெழுத்துகளும் சொல்லின் இறுதியில் வரும்.
3. பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக் கொள்வர்.

சான்று:

விள (விளாமரம்) - அ, பலா - ஆ, கரி - இ, தீ - ஈ, சுடு - உ, பூ - ஊ, சோ(எருது) - எ, தே - (இறைவன்) - ஏ, தை - ஐ, நொ (துன்பம்) - ஒ, போ - ஓ, கௌ (தீங்கு) - ஔ உரிஞ் (உரிஞ்சுதல்) மண்பொருந் (உடன்படல்) மரம், பொன், வேய், வேர், வேல், தெவ்(பகை), வீழ் சூடு, பாடு, எஃகு - குற்றியலுகரத்தோடு முடிந்த சொற்கள்.

**இ) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.** M-20

**உயிரீறு**

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால். அது 'உயிரீறு' எனப்படும்.

மணிமாலை → மணி (ண்+இ) + மாலை - உயிரீறு

ண் + இ

**மெய்யீறு**

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்.

பொன்வண்டு → பொன் + வண்டு → மெய்யீறு

**ஈ) உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.**

**உயிர்முதல்**

வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும்.

சான்று

வாழையிலை = வாழை + இலை

↓

உயிர்முதல்

**மெய்ம்முதல்**

வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது 'மெய்ம்முதல்' எனப்படும்.

சான்று

தமிழ்நிலம் = தமிழ் + நிலம்

↓

ந் + இ

↓

மெய்ம்முதல்

உ) குரங்குக்குட்டி - புணர்ச்சியை விளக்குக. M-19

குரங்குக்குட்டி = குரங்கு + குட்டி

| | விதி | மாற்றம் |
|---|---|---|
| ★ | இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் | குரங்கு + க் + குட்டி<br>குரங்குக்குட்டி என்றானது |

இவ்வாறு குரங்குக்குட்டி என்றானது.

## மொழியை ஆள்வோம்

**I. சான்றோர் சித்திரம்:**

1. தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் - இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.

**விடை :** புலமைக் கதிரவன் – உருவகம்

2. மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.
   1. **உவமைத் தொடர்** : தேனுண்ணும் வண்டு போல் பாடம் கற்றார்.
   2. **உருவகத் தொடர்** : "புலமைக் கதிரவன்" எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் ஆவார்.

3. மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர்— விடைக்கேற்ற வினாவை அமைக்க.

**விடை :** அ) மீனாட்சி சுந்தரனார் எப்புராணங்கள் பாடுவதில் சிறந்தவர்? (அல்லது)

ஆ) தலப்புராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

4. பத்தியில் மொழிமுதல் எழுத்துகளைக் கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் என்று சுட்டுக.

**மொழி முதல் எழுத்துகள்:**

உயிர் எழுத்துகள் = 12
க, த, ந, ப, ம, ச, ஞ, ய, வ, ங = 10
} 22 எழுத்துகள்

- கதிரவன்
- மகாவித்துவான்
- மடம்
- புராணங்கள்
- யமக அந்தாதி

5. விளங்கினார் — பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

விளங்கினார் = விளங்கு + இன் + ஆர்

விளங்கு = பகுதி

இன் = இறந்தகால இடைநிலை,

ஆர் = பலர்பால் வினைமுற்று விகுதி

**II. தமிழாக்கம் தருக :**

1. The Pen is mightier than the Sword.

வாளின் கூர்மையை விட பேனாமுனை கூர்மையானது.

2. Winners don't do different things, they do things differently.

வெற்றியாளர்கள் மாறுபட்ட செயல்களைச் செய்வதில்லை, அவர்கள் தாங்கள் செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்.

3. A picture is worth a thousand words.

ஓர் ஓவியம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

4. Work while you work and play while you play. M-19

வேலையின் போது வேலைசெய், விளையாடும் போது விளையாடு.

5. Knowledge rules the world.

அறிவு உலகத்தை ஆள்கிறது.

**III. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:**

| | | | |
|---|---|---|---|
| 1. வாடகை | – குடிக்கூலி | 2. மாதம் | – திங்கள் |
| 3. போலீஸ் | – காவல் | 4. நிச்சயம் | – உண்மை, உறுதி |
| 5. உத்திரவாதம் | – உறுதிமொழி | 6. சந்தோஷம் | – மகிழ்ச்சி |
| 7. சம்பளம் | – ஊதியம், வருவாய் | 8. ஞாபகம் | – நினைவு |
| 9. வருடம் | – ஆண்டு | 10. தேசம் | – நாடு |
| 11. வித்தியாசம் | – வேறுபாடு | 12. உற்சாகம் | – புத்துணர்வு, ஆனந்தம் |
| 13. விசா | – நுழைவு இசைவு | 14. பாஸ்போர்ட் | – கடவுச் சீட்டு |
| 15. கம்பெனி | – நிறுவனம், தொழிலகம் | 16. பத்திரிகை | – இதழ் |
| 17. கோரிக்கை | – வேண்டுகோள் | 18. யுகம் | – ஆண்டு |
| 19. ராச்சியம் | – அரசாட்சி | 20. சரித்திரம் | – வரலாறு |
| 21. முக்கியத்துவம் | – முதன்மை, முன்னுரிமை | 22. சொந்தம் | – கேளிர், உறவு |
| 23. சமீபம் | – அருகில், அண்மை | 24. தருணம் | – வேளை |

**IV. கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக :**

அனுப்புநர்:
இலக்கியச்செல்வன்
12 ஆம் வகுப்பு
அ.மே. நி. பள்ளி
அஅஅ மாவட்டம்

பெறுநர் :
திரு. முதன்மை ஆசிரியர்
தமிழ் நாளிதழ் அலுவலகம்
அஅஅ மாவட்டம்

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டுதல் தொடர்பாக

அன்புடையீர்,

வணக்கம், நான் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிறேன். தாங்கள் எமது பள்ளியில் நடந்த நிகழ்வு ஒன்றினை நாளிதழில் செய்தியாக வெளியிட வேண்டும். செய்தி பின்வருமாறு:

மாதந்தோறும் திங்கள் கூடுகைக்கு “அரியன கேள் புதியன செய்” என்ற தலைப்பில் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இம்மாதம் எமது பள்ளியில் பிற்பகல் 2.30 மணியளவில் கூட்டம் நடைபெறவிருக்கிறது. தமிழ்த்தாய் வாழ்த்தை அடுத்து மாணவர் இலக்கியச்செல்வன் வரவேற்புரை ஆற்றுகிறார். நிகழ்விற்குத் தலைமையாசிரியர் திரு. எழிலன் அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டுள்ள கவிஞர் வாணி அவர்கள் “புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை” என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றுகிறார். அதைத் தொடர்ந்து மாணவர் ஏஞ்சலின் நன்றியுரையாற்ற இறுதியாக நாட்டுப்பண்ணுடன் நிகழ்வு இனிதே நிறைவடைகிறது.

இடம் : அஅஅ
நாள் : அஅஅ

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
இலக்கியச்செல்வன்.

உறைமேல் முகவரி,
திரு. முதன்மை ஆசிரியர்
தமிழ் நாளிதழ் அலுவலகம்
அஅஅ மாவட்டம்

**V. பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க :**

**1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

| | |
|---|---|
| 1. இனிமை | 2. பண்பாடு |
| 3. அகப்பொருள் | 4. மொழி |
| 5. கவிதை | 6. பல்கலைப் புலமை |
| 7. கலைப் புலமை | 8. அழகு |
| 9. மென்மை | 10. பாட்டு |

**2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**

1. அதூஉம் – செய்யுளிசை அளபெடை
2. தழீஇய – சொல்லிசை அளபெடை

**3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**

"தமிழ் மொழிப்போல் இனிமையும், பழமையும் கொண்ட மொழி இவ்வுலகில் இல்லை" – என்பதாகும்.

**4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**

"தமிழ் மாலை"

**5. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**

"தமிழின் சிறப்பு"

## மொழியோடு விளையாடு

**1. எண்ணங்களை எழுத்தாக்குக.**



அந்தக் குருவிக்கு அந்தக் குழாயில் விழும் ஒரு துளி அதன் உயிர்த்துளி. ஆம் இந்தப் பூமியில் நமக்கும் அப்படித்தான்; 'நீரின்றி அமையாது உலகு' என்ற வள்ளுவரின் வாக்கை உணர்ந்து நாம் மழைநீரைச் சேமித்தோ, நீரைச் சிக்கனமாக உபயோகித்தோ, மழைவளம் பெருக மரங்கள் வளர்த்தோ நமது பங்களிப்பை இந்த உலகிற்குத் தர வேண்டும். அதுவே நாம் செய்யும் மிகப்பெரிய செயலாகும்.

**2. தொடரிலுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

(எ.கா) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்.

**விடை:** அ) மயில் ஓர் அழகான பறவை.

ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

i) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.

**விடை:** அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.

ஆ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

ii) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

விடை: அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.

ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

iii) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.

விடை: அ) பிறர் செய்த உதவியை மறக்கக் கூடாது.

ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக் கூடாது.

iv) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?

விடை: அ) நேற்று ஏன் பக்கத்தில் இருக்கவில்லை தெரியுமா?

ஆ) பக்கத்தில் வந்த பையன் யார்?

v) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

விடை: அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு.

ஆ) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

3. வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.

அ) வா ஆ) பேசு இ) தா இ) ஓடு உ) பாடு

அ) (எ.கா) வா – வேர்ச்சொல்

அருணா வீட்டுக்கு வந்தாள் (வினைமுற்று)

அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)

கருணாகரன் பேருந்தில் மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)

என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

ஆ) பேசு – வேர்ச்சொல்

கயல்விழி என்னிடம் பேசினாள். (வினைமுற்று)

கயல்விழி பேசிய வார்த்தையால் மனம் மகிழ்ந்தேன். (பெயரெச்சம்)

கயல்விழி பேசி முடிப்பதற்குள் மழை வந்துவிட்டது. (வினையெச்சம்)

என்னுடன் பேசியவர் இளையராஜா. (வினையாலணையும் பெயர்)

இ) தா – வேர்ச்சொல்

மகதி உணவைத் தந்தாள். (வினைமுற்று)

மகதி தந்த உணவு மிகவும் சுவையானதாக இருந்தது. (பெயரெச்சம்)

மகதி உணவைத் தன் தோழியிடம் தந்து சென்றாள். (வினையெச்சம்)

மகதிக்குப் பரிசு தந்தவர் அவளுடைய பள்ளி முதல்வர். (வினையாலணையும் பெயர்)

ஈ) ஓடு – வேர்ச்சொல்

தேவி வேகமாக ஓடினாள். (வினைமுற்று)

தேவி ஓடிய வேகம் அதிவேகம் (பெயரெச்சம்)

தேவி அதிவேகமாக ஓடி முதல் பரிசைப் பெற்றாள். (வினையெச்சம்)

தேவியுடன் ஓடியவர் அவள் தந்தை. (வினையாலணையும் பெயர்)

உ) பாடு – வேர்ச்சொல்

மாறன் இனிமையாகப் பாடினான். (வினைமுற்று)

மாறன் பாடிய பாடல் இனிமையாக இருந்தது. (பெயரெச்சம்)

மாறன் பாடி முடிப்பதற்குள் மணி ஒலித்துவிட்டது. (வினையெச்சம்)

திருவாசகத்தைப் பாடியவர் மாணிக்கவாசகராவார். (வினையாலணையும் பெயர்)

* * * * *

You can buy our books
through our website

www.donbookart.com

MOBILE APP
FOR SCHOOL STUDENTS

Download the App
over your mobile to get
new experience & education

GET IT ON Google Play
Download on the App Store

Published by:

Don Publications (P) Ltd.

3/100/1, Uthamapandiankulam, Tuticorin Main Road, **TIRUNELVELI** - 627 351.
☎ : (0462) 2520977, 2520978, Cell: 73730 88821, 94433 39941. E-Mail: feedback@donpltd.com

New No. 17, Old No 21-A, 2nd Floor, 11th Avenue, Ashok Nagar, **CHENNAI** - 600 083.
☎ : (044) 48565226 Cell: 73730 88893, E-Mail: feedback@donpltd.com

Visit us at

: 94890 51851

## OUR AREA REPRESENTATIVES CONTACT NUMBERS

**you can buy books at the following wholesale / retail stores:**

| | |
|---|---|
| Chennai | 94432 21264, 94890 51855 |
| Chennai South | 73587 26333, 94890 51855 |
| Chennai Central | 90033 59974, 94890 51855 |
| Tiruvallur | 73587 26333 |
| Vellore | 94899 06831 |
| Kanchipuram | 94426 08864, 94890 51855 |
| Tirunelveli, Kanyakumari | 94433 39971, 73730 88835 |
| Erode | 94426 08863 |
| Dindugul, Karur | 94890 51852, 94426 08863 |
| Salem, Namakkal | 94426 08863 |
| Krishnagiri | 94426 08863 |
| Dharmapuri | 94426 08863 |
| Tuticorin | 94890 51851 |
| Trichy, Ariyalur, Perambalur | 73587 61666, 99430 22335 |
| Vilupuram | 94890 51854 |
| Thiruvarur, Thanjavur, Nagapattinam | 94421 19859 |
| Thiruvannamalai : | 94426 08864 |
| Virudhunagar, Ramnad, Sivagangai | 75980 38097 |
| Madurai, Theni, Pudukottai | 75980 38096 |
| Coimbatore | 73958 32888 |
| Tirupur, Nilgiris | 73958 32888 |
| Puducherry, Cuddalore | 94426 01362 |

## OUR BOOKS ARE AVAILABLE AT

### CHENNAI

1. M.K.StoresChennai 044 - 25386955
2. Bismi Book Centre 044 - 25363375/25383264
3. Kings Book House 044 - 25367660
4. Limra Book Centre 044 - 42032081
5. F.A.Stores 044 - 25392240
6. Prince Book House 044 - 42053926
7. A.R.Book Mart 99415 16187
8. M.R.Book Store 044 - 25364596 / 42080600
9. Arraba Book Traders 044 - 25387868

### TAMBARAM (W)

10. Sri Ram & Co Book Shop 044 - 22266431
11. Kalaimagal Book Centre 99524 99827

### CHIDAMBARAM

12. Vetri Book Centre 04144 - 222648 / 254359

### COVAI

13. Majestic Book House 0422 - 2382333 / 2384333
14. Cheran Book House 0422 - 4355453/2396623
15. Radhamani Stores 0422 - 2392122
16. CBSC Book Shop 0422 - 2393093
17. Kannan Puthaga Nilayam 0422 - 2398890, 4369890
18. Murugan Book Depot 0422 - 2396531

### CUDDALORE

19. Indian Book Centre 04142 - 231780
20. Bell Book House 94432 65414

### PANRUTTI

21. Sri Vinayaga Stores 81241 01837

### DINDIGUL

22. Ayyanar Book Centre 0451 - 2426561

### ERODE

23. Selvam Book Centre 0424 - 2257027
24. Dhana Book Company 0424 - 2221230
25. Kalaivani Book Centre 0424 - 3205711
26. Senthil Book Palace 0424 - 2214886

### KALLAKURICHI

27. Sri Kiruba Stationary 04151 - 222114

### KOVILPATTI

28. Chitradevi Book Centre 04632 - 220733

### MADURAI

29. Mano Book Centre 0452 - 2621577
30. Jeyam Book Centre 0452 - 2623636
31. Sunmathi Traders 0452 - 2338966

### NAGERCOIL

32. M. ARUMUGAMPILLAI SONS BOOK CENTRE 96004 23549, 0452 - 230728

### MARTHANDAM

33. Olympic Traders 04651 - 324533

### SALEM

34. Vignesh Book Centre 0427 - 4020407 / 4020409
35. AK Chandraiah Chettiar & Sons 0427 - 2410096
36. Kalaivani Book Centre 0427 - 2411083

### DHARMAPURI

37. Vimal Book Centre 94434 13414

### TANJORE

38. Sri Murugan Publications 04362 - 272922
39. Srinivasa Book Centre 04362 - 238985

### THENI

40. Maya Book Centre 94439 29273

### TENKASI

41. Maheshwari Book Centre 04633 - 224406

### TIRUNELVELI

42. Eagle Book CentrePalai. Tvl 0462 - 2578899
43. Padma Book Stall 0462 - 2337650
44. Shyamala Book Centre 0462 - 2338800
45. Chitradevi Book Centre 0462 - 2334344
46. Velavan Book Centre 0462 - 2574457
47. Ponnaiya Pillai Book Shop 0462 - 2572564

### TIRUVANNAMALAI

48. APM Book Centre 04175 - 224725

### TIRUPPUR

49. Senthil Stores 0421 - 2247274
50. Chola Book House 0421 - 4323668
51. Maheshwari Book Stall 94420 04254, 0421 - 2236414

### TIRUCHIRAPPALLI

52. Sri Murugan Book Centre 0431 - 2703076
53. Rasi Publications 0431 - 2703692
54. Tamilnadu Book House 96592 99661
55. Sri Raghavendra Stores 0431 - 2707506

### TUTICORIN

56. Sri Durga Stores 0461 - 2326694
57. Eagle Book Centre 0461 - 2392333

### VILUPPURAM

58. Sabarinathan Brothers 04146 - 222581

### VIRUDHUNAGAR

59. Sethus Book Centre 04562 - 248400 / 94864 61400